# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 1021/2017/பே
ஆணை நாள்: 27–11–2018

திரு. V. பழனிவேல் ராஜன்,
52, மதுரை மண்டபம் பிரதான சாலை,
திருப்புவனம் புதூர் – 630 611. --- முறையீட்டு மனுதாரர்

1.செயல் அலுவலர்,
0 திருப்புவனம் பேரூராட்சி,
திருப்புவனம்.
2.திரு.க.ரவி,
த/பெ திரு.கணேசன்,
18/12, சேதுபதி நகர்,
திருபுவனம்,
சிவகங்கை மாவட்டம். --- எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரரின் திருப்புவனம் பேரூராட்சி மற்றும் மேற்படி எதிர்மனுதாரர்கள் மீது குற்றஞ்சாட்டி தாக்கல்செய்யப்பட்ட முறையீடுகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரது 15.04.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.102/2017 நாள்:08.05.2017ல் ஆணையிடப்பட்டது.

2. 2–வது எதிர்மனுதாரர் திரு. க. ரவி என்பவரால், மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட நீதிப் பேராணை எண்.13041/17ல் 19.09.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களது 15.04.2016 நாளிட்ட ஆணை, மற்றும் மேற்படி இம்முறைமன்ற நடுவ 08.05.2017 நாளிட்ட ஆணையும் ரத்து செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பளித்து தகுதியின் அடிப்படையில் மீண்டும் விசாரித்து முடிவு செய்திட ஆணையிடப்பட்டது.

3. மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் ஆணையின்படி, தனது தரப்பிலான ஆட்சேபனைகளை போதுமான ஆவண ஆதாரங்களுடன் சமர்ப்பிக்குமாறு 2–வது எதிர்மனுதாரர் திரு.க. ரவி, என்பவருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை

எண்.1021/2017/பே.1 நாள்:07.11.2017ன்படி முறையே உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து திரு. ரவி தனது 25.11.2017 நாளிட்ட மனு ஒன்றினை அனுப்பி வைத்தார். மேற்படி மனுவில், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் சந்தையில் வசூலிக்கப்பட்டது குறித்த குற்றச்சாட்டின் மீது எந்தவொரு விளக்கமும், ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மேற்படி மனுவுடன் மானாமதுரை வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட 25.01.2001 நாளிட்ட ஒரு சால்வென்சி சான்றின் நகல் மற்றும் 14.01.2008 நாளிட்ட பிறிதொரு சால்வென்சி சான்றின் நகல் ஆகியவை இணைத்து வரப்பெற்றன. மேற்படி இரண்டு சால்வென்சி சான்றுகளிலும் ஓராண்டு வரை மட்டுமே செல்லத்தக்கதென சான்றளிக்கப்பட்டுள்ளது.

4. எனவே, மேற்படி நபரது நேரடி விளக்கங்களை பதிவு செய்யும் பொருட்டு 13.12.2017 அன்று விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட ஆவண நகல்களுடன் ஆஜராகுமாறு 01.12.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட மேற்படி நபர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆனால், அவர் தனது 12.12.2017 நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் மூலம் தனக்கு உடல் நிலை சரியில்லை (வைரஸ் காய்ச்சல்) எனவும் விசாரணையை ஒத்தி வைக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். அவரது மேற்படி கோரிக்கை ஏற்கப்பட்டு 08.01.2018 அன்று மறு விசாரணை நிர்ணயிக்கப்பட்டு, உரிய அறிவிப்பு இம்முறைமன்ற நடுவம் 13.12.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்விசாரணைக்கும் திரு. க. ரவி ஆஜராகவில்லை. ஆனால் அவர் தனது 08.01.2018 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனக்கு தொடர்ந்து வைரஸ் காய்ச்சல் மற்றும் நெஞ்சுவலி ஏற்பட்டிருப்பதால் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகவும் தன்னால் 08.01.2018 விசாரணைக்கு ஆஜராக இயலாததை மன்னித்து ஏற்றுக்கொண்டு 10 நாட்கள் வாய்தா ஏற்படுத்தி அறிவிப்பு அனுப்ப வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

5. இம்முறையும் கோரிக்கை ஏற்கப்பட்டு, 26.03.2018 அன்று மறு விசாரணை நிர்ணயிக்கப்பட்டு 22.01.2018 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் மாண்பமை நீதிமன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் ஒப்பந்ததாரர் திரு. க. ரவி தரப்பிலான விளக்கங்கள் மற்றும் ஆதார ஆவணங்களை பெற வேண்டியதன் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு, அவருக்கு தொடர்ந்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு வந்தன. இதனிடையே மனுதாரர் தனது 12.03.2018 நாளிட்ட கடிதமொன்றில், தனது தந்தையின் உடல் நலம் மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும், 26.03.2018 அன்று விசாரணைக்கு தனது வழக்கறிஞரை ஆஜராக அனுமதிக்குமாறும் கோரியிருந்தார். ஆனால் அதனைத் தொடர்ந்து அவரிடமிருந்து 26.03.2018 அன்று மின்னஞ்சல் மூலம் வரப்பெற்ற கடிதத்தில், தனது தந்தையார் உடல் நலக் குறைவால் இறந்துவிட்டாரெனவும், இறுதிச் சடங்கு செய்யவிருப்பதால் 26.03.2018 விசாரணைக்கு தன்னால் ஆஜராக முடியவில்லை என்றும் தெரிவித்து மறு வாய்தா வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. 08.01.2018 அன்று செயல் அலுவலரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது அறிவுறுத்தப்பட்டவாறு, செயல் அலுவலர் தனது 29.01.2018 நாளிட்ட அறிக்கையினை அனுப்பி வைத்துள்ளார். மேற்படி அறிக்கையில், 08.08.2015 அன்று பேரூராட்சி அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டு முக்கிய ஆவணங்கள் எரிந்து போனதால் 08.08.2015க்கு முன்னர் நடத்தப்பட்ட குத்தகை மற்றும் திட்டப்பணி தொடர்பான ஆவணங்கள் எதும் இல்லாததால் திரு. க. ரவிக்கு முன்பு குத்தகை பெற்றிருந்த எலதாரரின் விவரங்கள் அறிய இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 08.08.2015க்கு முன்னர் திரு. க. ரவி என்பவரால் கொடுக்கப்பட்ட சால்வன்சி விபரங்கள் அலுவலகத்தில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 08.08.2015க்குப் பின்னர் அன்னாரால் வழங்கப்பட்டதாகத் தெரிவித்த மானாமதுரை, வட்டாட்சியரால் அளிக்கப்பட்டுள்ள 25.01.2001

நாளிட்ட சால்வன்சி சான்றின் நகல் செயல் அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு மேற்படி சான்று ஓராண்டிற்கு மட்டுமே செல்லத்தக்கதென மேற்படி சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. இந்நிலையில் மேற்படி 2–வது எதிர்மனுதாரர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் பிறிதொரு வழக்கினை (நீதிப் பேராணை எண்.6327/2018) தாக்கல் செய்தார். மேலும், அவ்வழக்கில் முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளின் போது தனக்கு உதவி புரிவதற்கு வழக்குரைஞரை உடன் வைத்துக்கொள்ள அனுமதித்திட வேண்டுமென தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமெனக் கோரியிருந்தார். நீதிப்பேராணை எண்.13041/17ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வினால் பிறப்பிக்கப்பட்ட 19.09.2017 நாளிட்ட ஆணைகளின்படி, உரிய பரிசீலனை மற்றும் விசாரணைகள் மேற்கொண்டு தக்க ஆணைகள் வெளியிடுமாறு முறையீட்டு மனுதாரர் திரு.பழனிவேல்ராஜன் என்பவர் தரப்பிலான வழக்குரைஞர்கள் மூலம் 08.06.2018 நாளிட்ட கடிதம் வரப்பெற்றது.

8. நீதிமன்ற ஆணைகளின்படி, நீதிப்பேராணை மனுதாரரான திரு. க. ரவி, முன்னாள் ஒப்பந்ததாரருக்கு உரிய வாய்ப்புகள் அளித்து அவர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆட்சேபனைகள்/விளக்கங்கள் மற்றும் ஆதார ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி முறையீட்டு மனுதாரர் திரு. பழனிவேல்ராஜன் மற்றும் திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் தரப்பிலான விளக்கங்கள் பெறப்பட வேண்டுமென்பதைக் கருதி திரு. க. ரவி என்பவருக்கு 10.07.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து 19.06.2018 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், விசாரணையின் போது அவர் விரும்பும் பட்சத்தில் அவர் வழக்குரைஞர் கலந்து கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. திரு. க. ரவி, இம்முறை தனது 15.07.2018 நாளிட்ட கடிதத்தில், 10.07.2018 விசாரணைக்கான அறிவிப்பு தனக்கு 14.07.2018 அன்று தான் கிடைத்தது எனவும் தனக்கு உடல் நலம் சரியில்லாததால் உரிய காலத்தில் ஆஜராக முடியவில்லை எனத் தெரிவித்தும் தனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பளிக்குமாறு கோரினார். இம்முறையும் அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு 25.09.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகி தங்கள் தரப்பு விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து 19.07.2018 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது அதன்படி 25.09.2018 அன்று நிர்ணயிக்கப்பட்ட விசாரணையின்போதும் மேற்படி நபர் திரு. க. ரவி. ஆஜராகவில்லை. ஆனால், அவரது தரப்பில் நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்து M/s J. ANAND KUMAR" எனும் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் திருவாளர்கள். B. விஜய், திரு. S. முகமது உடுமான் மற்றும் திரு. ஆனந்தகுமார் ஆகியோர் சார்பில் ஒரு வழக்குரைஞர் மட்டும் ஆஜராகி மேற்படி விசாரணையை பிறிதொரு நாளுக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டு எழுத்து பூர்வமான கடிதம் மற்றும் வக்காலத்தினையும் தாக்கல் செய்தார். விசாரணை 12.10.2018 அன்று நடைபெறுமென முறைமன்ற நடுவத்தால் அப்போதே அறிவிக்கப்பட்டு, ஆஜரான வழக்குரைஞரின் ஒப்பமும் பெறப்பட்டது. மேலும், திரு. க. ரவி என்பவருக்கும் முறையே அழைப்பாணையும் அனுப்பி வைக்கப்பட்டது. எனவே, மேற்படி நீதிமன்ற ஆணைகளின்படி (நீதிப்பேராணை) மனுதாரர் திரு. க. ரவி என்பவருக்கு நிர்ணயிக்கப்பட்ட விசாரணைகள் முடிவுறாததை விவரித்தும், இறுதி வாய்ப்பாக 12.10.2018 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதை தெரிவித்தும், விரும்பும் பட்சத்தில் தங்கள் தரப்பு விளக்கங்களை/ ஆவணங்களை மேற்படி நாளன்று ஆஜராகி தாக்கல் செய்யலாமெனத் தெரிவித்தும் அழைப்பாணை முறையீட்டு மனுதாரர் திரு. பழனிவேல்ராஜன் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. தொலைபேசி மூலமும் தெரிவிக்கப்பட்டது.

9. 12.10.2018 அன்றும் விசாரணைக்கு திரு. க. ரவி ஆஜராகவில்லை. ஆனால் அவர் தரப்பில் பிறிதொரு வழக்குரைஞர் திரு. எம். அமர்நாத் ( Representative Counsel) என்பவர் மட்டும் ஆஜராகி தனது தரப்பு வாக்குமூலத்தினையும், திரு. ரவி, தரப்பு எழுத்து பூர்வமான வாதுரையினையும் சமர்ப்பித்தார். மேற்படி வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மனுதாரர் திரு. G. ரவி சார்பாக 25.9.2018 அன்று வாக்காலத்து திருவாளர்கள் ஜெ. அனந்தகுமார் சார்பாக என்று பிரிண்ட் செய்யப்பட்டதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. திரு. பி. விஜய், திரு. எஸ். முகமது உதுமான் மற்றும் திரு. ஆனந்தகுமார் ஆகிய மூவரும் வழக்குரைஞர்கள். நான் இங்கு இன்று எழுத்து மூலமாக திரு. G. ரவி, சார்பாக வாதுரையை தாக்கல் செய்துள்ளேன். இதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். எதிர்மனுதாரர் திரு.G. ரவி இன்று ஆஜராகவில்லை, நான் வழக்குரைஞர்கள் திரு. விஜய் திரு. எஸ். முகமது உதுமான், திரு.ஆனந்தகுமார் சார்பாக, மனுதாரர் திரு. G. ரவி சார்பில் இன்று எழுத்து மூலமான வாதுரையை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வழக்குரைஞர் பிரதிநிதியாக (Advocate Representative) தாக்கல் செய்துள்ளேன். தற்பொழுது திரு. G. ரவி சார்பாக அவரால் அதிகாரம் பெற்ற வழக்குரைஞரால் இன்று எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர் திரு. G.ரவியையோ, மற்றவர்களையோ விசாரணைக்கு மீண்டும் அழைக்கத் தேவையில்லை. இன்று எழுத்து மூலமான எங்களுடைய வாதுரையில் அனைத்து விவரங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இணைப்பாக தற்போது எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

10. மேற்படி வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்ட வாதுரை மீதான தங்கள் தரப்பு விளக்கங்கள்/ ஆட்சேபனைகளிருப்பின் ஒரு வார காலத்திற்குள் தாக்கல் செய்யுமாறு தெரிவித்து முறையிட்டு மனுதாரர் திரு. பழனிவேல்ராஜன் மற்றும் திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு முறையே 12.10.2018 மற்றும் 15.10.2018 நாளிட்ட அறிவிப்பாணைகள் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டன. மனுதாரர் திரு. பழனிவேல்ராஜன் தரப்பிலிருந்து எவ்வித விளக்கங்களும்/ஆட்சேபணைகளும் வரப்பெறவில்லை. செயல் அலுவலரிடமிருந்து 26.10.2018 நாளிட்ட ஒரு அறிக்கை வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் திரு. க. ரவி என்பவர் மீது தெரிவிக்கப்பட்ட புகார் தொடர்பாக இவ்வலுவலகம் (பேரூராட்சி) விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி திரு. ரவியால் அவர் வசம் உள்ள ஆவணங்கள் எதும் விசாரணைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை' எனவும் இவ்வலுவலகம் (பேரூராட்சி) மூலம் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும் தற்போது அன்னாரால் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் தொடர்பாக இவ்வலுவலகம் (பேரூராட்சி) மூலம் "எவ்வித கூடுதல் விளக்கங்களும்/ ஆட்சேபணைகளும் இல்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற, மதுரை அமர்வின் ஆணைகளுக்கிணங்க முன்னாள் ஒப்பந்ததாரராகிய, 2–வது எதிர்மனுதாரர் திரு. க. ரவி என்பவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரைகள்/ஆட்சேபணைகள் இம்முறைமன்ற நடுவத்தால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி நபர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த நீதிப்பேராணை எண்.13041/2017ல் தனக்கு வாய்ப்பு அளிக்காமல் சிவகங்கை கோட்டாட்சியராலும், இம்முறைமன்ற நடுவத்தாலும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதாக தெரிவித்த நிலையில், மாண்பமை நீதி மன்றத்தின் 19.09.2017 ஆணைகளின்படி, மேற்படி சிவகங்கை கோட்டாட்சியரது ஆணை மற்றும் இம்முறைமன்ற நடுவ ஆணைகள் ரத்து செய்யப்பட்டு, மேற்படி

மனுதாரருக்கும் பிற தரப்பினருக்கும் வாய்ப்பளித்து, தாக்கல் செய்யப்படும் ஆதார ஆவணங்களைப் பரிசீலித்தும் உரிய விசாரணைகள் மேற்கொண்டும் தகுதி அடிப்படையில் தக்க ஆணைகளை இம்முறைமன்ற நடுவம் பிறப்பித்திட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணைகளுக்கிணங்க, இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளுக்குப் பின்னர், முன்னாள் ஏலதாரர் திரு.க. ரவி தரப்பிலிருந்து பெறப்பட்ட எழுத்து பூர்வமான வாதுரை/விளக்கங்களில் கூடுதல் ஆவணங்கள் ஏதுமில்லை எனத் தெரிவித்துள்ளதோடு மேற்படி நபரையோ, மற்றவர்களையோ மேற்கொண்டு விசாரணைக்கு அழைக்க வேண்டியதில்லை எனவும், தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு திரு. ரவி, தனக்கு வாய்ப்பளிக்காமல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தால் இறுதி ஆணை இடப்பட்டது எனக் குறிப்பிட்டு நீதிப் பேராணை எண்.13041/2017 ல் வழக்கு தொடர்ந்திருந்தார். அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வினால் மனுதாரருக்கும் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் வாய்ப்பளித்து தகுதியின் அடிப்படையில் ஆணையிடுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு ஆணையிடப்பட்டது. ஆனால், மனுதாரருக்கு பல வாய்ப்புகள் அளித்தும், ஆஜராகாமல் இருந்ததுடன் இறுதியாக அவர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் பிரதிநிதியால் (Representative Counsel) தாக்கல் செய்யப்பட்ட வாதுரையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்படி தனிப்பட்ட ஒப்பந்ததாரராகிய தன்னை முறைமன்ற நடுவம் விசாரித்திட அதிகாரம் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.

12. மேலும், முன்னாள் ஒப்பந்ததாரர் திரு. க. ரவி தரப்பில் 12.10.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்து பூர்வமான வாதுரை/விளக்கங்களில் முறையீட்டு மனுதாரர் திரு.பழனிவேல்ராஜன் என்பவர் தன்மீது மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் குற்றவியல் சீராய்வு மனு (Crl. R.C. (MD) No.504/2018) ஒன்றினையும் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதையும், மேற்படி மனுதாரர் தரப்பிலிருந்து எந்தவொரு விளக்கங்களும்/ஆட்சேபனைகளும் தற்போது தெரிவிக்கப்படாததையும் கருத்தில் கொண்டு மேற்படி மனுதாரர் திரு.பழனிவேல்ராஜன் அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் கோரியவாறு அவர் தரப்பிலான விளக்கங்கள்/ஆட்சேபனைகளையும், மேற்படி திரு.க.ரவி என்பவரது கடிதத்தில் தற்போது குறிப்பிட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் அவரால் (திரு.பழனிவேல்ராஜன்) தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் (Crl.R.C.(MD)No.504/2018) விவரங்களையும் அனுப்பி வைத்திட வலியுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனுதாரர் தனது 16.11.2018 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் மேற்படி நீதிமன்ற வழக்கு தொடர்பான வாதுரையினை மட்டும் அனுப்பி வைத்துள்ளார். மேற்படி வாதுரையில் திரு.க.ரவி, என்பவர் பொய்யான சால்வன்சி சான்றுகளின் அடிப்படையில் சட்டத்திற்கு புறம்பாக பேரூராட்சி ஒப்பந்தப் பணிகளை பெற்றுள்ளது குறித்து நடவடிக்கை எடுக்க 15.11.2016 நாளிட்ட மனு காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும், இது குறித்து சிவகங்கை கோட்டாட்சியரால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவை தன்னால் தாக்கல் செய்யப்பட்டதென்றும், ஆனால், கீழமை நீதிமன்றம்(மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்) இவற்றை பரிசீலிக்காமல் தனது மனுவினை நிராகரித்ததாகவும் குறிப்பிட்டு மேற்படி 16.07.2018 நாளிட்ட கீழமை நீதிமன்ற ஆணையினை (Crl.M.P.5558/2017) ரத்து செய்திட வேண்டுமென மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மேற்படி வழக்கில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

13. மேற்குறிப்பிட்ட மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிலும், இதனைத் தொடர்ந்து தற்போது நிலுவையிலுள்ள மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்விலுமுள்ள வழக்கிலும், திருபுவனம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு.கே.ராஜகோபாலன் என்பவரும் ஒரு எதிர் மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளதால், அவரை தொடர்பு கொண்டு மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் வாதுரையினை பெற்று அனுப்பி வைத்திட இம்முறைமன்ற நடுவத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி, மேற்படி முன்னாள் செயல் அலுவலர், மனுதாரர் திரு.என்.எஸ்.வி.பி.வி பழனிவேல்ராஜன் என்பவர் Crl.M.P.No. 5558/2017 எண்ணிட்ட வழக்கில் மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பிரமாணத்தின் நகலினையும் 16.07.2018 நாளிட்ட உத்தரவின் நகலினையும் 26.11.2018 அன்று அனுப்பி வைத்துள்ளார். மேற்படி வழக்கில் ஒப்பந்தக்காரர் திரு. க. ரவி, என்பவர் முறையற்ற சால்வன்சியை வைத்து பேரூராட்சி பணிகளை மோசடியாக பெற்றதாக புகார் தெரிவித்து அவர் மீது விசாரணை மேற்கொண்டு, குற்றவியல் சட்டங்களின்படி தக்க தண்டனை வழங்கி உத்திரவிட மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 16.07.2018 அன்று மாண்பமை நீதித்துறை நடுவர் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து மனுதாரர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (Crl.R.C.(MD)No 504/2018) தொடர்ந்துள்ளார். இதன்படி, மனுதாரர் திரு.பழனிவேல்ராஜன் என்பவர் திரு.க.ரவி, முன்னாள் ஒப்பந்ததாரர் மீது இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள முறையற்ற சால்வன்சியின் அடிப்படையில் பணி ஒப்பந்தங்கள் பெற்றது குறித்தான பொருட்பாடு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடர்ந்துள்ள மேற்படி நீதிமன்ற வழக்கில் நிலுவையில் உள்ளது.

14. மேற்படி நீதிமன்ற வழக்கு குறித்த விவரங்கள், மேற்குறிப்பிட்டவாறு தற்போதுதான் இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. இந்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே, இப்பொருட்பாடு தற்போது இம்முறைமன்ற நடுவ தொடர் விசாரணைக்கு ஏற்புடையதல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 27/11/2018

பெறுநர்

1.திரு. V. பழனிவேல் ராஜன்,
52, மதுரை மண்டபம் பிரதான சாலை,
திருப்புவனம் புதூர்,
சிவகங்கை மாவட்டம் – 630 611.

2திரு.G. ரவி,
த/பெ திரு.கணேசன்,
18/12, சேதுபதி நகர்,
திருப்புவனம்,
சிவகங்கை மாவட்டம்.

3.செயல் அலுவலர்,
திருப்புவனம் பேரூராட்சி,
திருப்புவனம்,
சிவகங்கை மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மண்டலம்,
மதுரை.

5. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம்,
சென்னை – 108.

<u>நகல்</u>

1. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
2. முறைமன்ற நடுவர் செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி).
4. திரு. D. சண்முகராஜசேதுபதி,
   தொடர் வழக்குறைஞர்,
   எண்.5/C, UNICORN COMPLEX,
   முதல் தளம், குருவிக்காரன் சாலை,
   காந்தி நகர்,
   மதுரை – 625 020.